

# பரிசுத் திட்டம் கைவிடத் தயார்!

அறிஞர் அண்ணா

# பரிசுச் சீட்டு திட்டம் கைவிடத் தயார்!

பேரறிஞர் :

அண்ணா

மக்கள் பதிப்பகம்,
40, நாட்டுப்பிள்ளையார் கோயில் தெரு,
சென்னை - 1.

முதற்பதிப்பு—1969
பதிப்புரிமை பெற்ற வெளியீடு—1

விலை 25 காசு

பேரறிஞர் அண்ணு அவர்களின் பரிசுச் சீட்டுக்கான விளக்க உரையைப் புத்தாண்டின் முதல் வெளியீடாக பொதுமக்கள் முன் சமர்ப்பிக்கின்ரும்.

வணக்கம்.

முத் தமிழ்ச் செல்வி அச்சகம் 1/65, பிராட்வே, சென்னை—1.

பற்றுக்குறைப் பொருளாதாரம்—தேவைக்கேற்ப ரூபாய் நோட்டுக்களை அச்சடித்து மத்திய அரசாங்கம் புழக்கத்தில் விடும் பழக்கம்—ஒவ்வொரு மாநிலத்தையும் பொருளாதார நெருக்கடியின் விளிம்பிற்குக் கொண்டு சென்றுவிட்ட நேரத்தில்,

செம்மையாக நிதி வசதிகளை—வரி வருவாய் வகைகளை நிர்வகித்த மாநிலம் என்று பெயர் பெற்ற தமிழகம் கடன் சுமையால் மென்னி இருகிற அளவிற்கு சுமை ஏறி இருந்த காலத்தில்,

ரிசர்வ் பாங்கிலிருந்து அதிகப்பற்று வசதி பெற்றுக் கொள்ளலாம் என்ற நிலை இருந்தும், அதை விட்டகுறை, தொட்டகுறை என்று எப்போதாவது பயன்படுத்திக் கொண்டு வந்த தமிழகம், தொடர்ந்து அதிகப் பற்றையே நம்பிக் கொண்டிருக்க வேண்டிய பரிதாப நிலைக்கு வந்த நேரத்தில்,

அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று நிதி நிலையைச் சீர் செய்து, படி அரிசித் திட்டத்தையும் அமுல்படுத்தி, துண்டுவிழும் தொகையைச் சரிக்கட்ட என்ன செய்யலாம் என்று ஆழ்ந்து சிந்தித்து,

உலகின் பல பெரும் நாடுகளிலும். மற்ற மாநிலங்களிலும், நடத்தப்படும் பரிசுச் சீட்டுத் திட்டத்தை (லாட்டரியை) ஆரம்பிக்கலாம் என்ற முடிவிற்கு வந்து, ஓராண்டில் மூன்று அல்லது நான்கு முறை லாட்டரி நடத்தினால், பற்றுக்குறையைச் சரிக்கட்டி, உபரியும் காட்டலாம் என 1967-68-ம் ஆண்டிற்கான உபரி பட்ஜெட்டை (வரவு-செலவுத் திட்டத்தை) தயாரித்தளித்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் தமது பட்ஜெட் உரையில் சொன்னதை யொட்டி, 1968-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதி பரிசுச் சீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழக கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங் தலைமையில் ராஜாஜி மண்டபத்தில் நடந்த அந்த விழாவில், முதலாவது வரிசைப் பரிசுச் சீட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டன. ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் பரபரப்போ, கண்டனமோ, இல்லாமல், கிணற்றில் கல் போட்டது போல் பரிசுச் சீட்டுத் திட்டம் தொடங்கியது.

முதல் குலுக்கல் முடிந்த பின்னர், தமிழக அரசின் லாட்டரிச் சீட்டுகளுக்கு கிராக்கி அதிகரித்தது. கண்டனமும் கூடவே கிளம்பிற்று. இதையெல்லாம் முன் கூட்டியே அனுமானித்து, அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்:—

இன்றைய தினம் ஆரம்பிக்கப்படுகிற இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டம்—நல்ல காரியங்களுக்கு உதவுகிற ஒரு நற்பணிக்கு மக்கள் ஊக்கமளிக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்கான அறிகுறி: அரசாங்கம் மேற்கொள்கிற திட்டங்களில், அரசாங்கம் நடத்துகிற எல்லாப் பணிகளிலும் எல்லாத் தரப்பு மக்களும் பங்குகொள்கிறார்கள் என்பதைக் காட்டும் வகையில்தான் ஒரு பரிசுச் சீட்டு ஒரு ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ரூபாய் ஒரு டிக்கட் வீதம் விற்கலாம் என்றுகூட யோசனைகள் தெரிவிக்கப்பட்டது. சாதாரண மக்களும், அன்றாடம் சம்பாதித்துப் பிழைப்பவர்களும், அரசாங்கத்தின் பரிசுச் சீட்டை வாங்க வேண்டும் என்ற நோக்கோடுதான், ஒரு ரூபாய்க்கு ஒரு சீட்டு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

## இரண்டுவகையிலும்

ஒரு ரூபாய்க்கு ஒரு பரிசுச்சீட்டு வாங்குவதன் மூலம், உங்களது அதிர்ஷ்டத்தையும் சோதிக்கலாம். பரிசு

கிடைக்காவிட்டால், அரசாங்கத்தின் நற்பணிகளுக்கு நமது ஒரு ரூபாய் உதவிற்று என்ற நிம்மதியோடிருக்கலாம்.

தனிப்பட்டவர்கள் பரிசுச்சீட்டுகளை நடத்தும்போது, அந்தப் பரிசுத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதையும், தனிப்பட்ட ஒரு சிலரே தங்களது சொந்த நன்மைக்காகப் பயன்படுத்திக் கொண்டனர்.

அரசாங்கமே இப்போது பரிசுத்திட்டத்தை அமுல் படுத்துவதன் மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் பள்ளிகளாக, கல்லூரிகளாக, நூல் நிலையங்களாக, நீர்ப் பாசனத் திட்டங்களாக உருமாறும்.

நான் கொடுத்த ஒரு ரூபாய் இதோ ஒரு கல்லூரியாக வளர்ந்திருக்கிறது. நான் கொடுத்த பணம் அதோ ஒரு மருத்துவமனையாக மாறி இருக்கிறது; பள்ளிக்கூடம் கட்ட பயன்பட்டிருக்கிறது என்று நீங்கள் நெஞ்சுநிமிர்த்திப் பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும்.

அரசாங்கம் மக்களுக்குச் செய்து தீரவேண்டிய அத்தியாவசியப் பணிகள் அனைத்தும், அரசாங்கத்தின் வரி வருவாய் வகைகளிலிருந்து மட்டும் நிறைவேற்றப்பட முடியாது. வரி விதிப்புகளுக்கும் ஒரு எல்லையுண்டு. மக்கள் தாங்குகிற அளவிற்குத்தான் வரிகளைப்போட்டு வசூலிக்க முடியும். வரிகளின் அளவிற்கு ஏற்பத்தான் வசதிகள் பெருகவேண்டும் என்று இருந்துவிட்டால், பல பொது நன்மைகள் முற்றுப் பெறுமலே போய்விடும். இப் போது தமிழ் நாட்டில் வரி வருவாய்கள் அனைத்தும், உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டன. இனியும் வரிகளைக் கூடுதலாக்கி, மக்களைத் துன்புறுத்த வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல. எனவேதான் மக்கள் தாங்களே விரும்பிக் கொடுக்கிற பணத்திலிருந்து பொது நன்மைகளை மேற்கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு பரிசுச்சீட்டுத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம்.

## கோளாறுகள் இல்லை

இதற்கு முன்னர் அரசாங்கமே நடத்திய, பல பரிசுத் திட்டங்களில், விற்காத டிக்கட் எண்களையும் சேர்த்துக் குலுக்கி, அரசாங்கத்திற்கே பரிசுகள் விழுந்த நிகழ்ச்சிகள் நடந்திருப்பதை உத்தேசித்து முன்னெச்சரிக்கையுடன், விற்பனையாகாத டிக்கட்டுகளை—பரிசுக் குலுக்கலில் சேர்க்காமல் இருக்க, ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அரசாங்கத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்தால், இதில் ஏதோ கோளாறு உள்ளது என மக்கள் சந்தேகிக்கிற சூழ்நிலை உருவாகக் கூடும் என்பதால் தான் அமைச்சர்கள் பரிசுச் சீட்டுகளை வாங்கக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதிர்ஷ்டம் இருக்கும் ஏதாவதொரு அமைச்சருக்கு பரிசு விழுந்தாலும் பரிசுச் சீட்டிலேயே கோளாறு உள்ளது என்று மற்றவர்கள் சந்தேகிக்கக் கூடும் என்பதால்தான் அமைச்சர்கள் பரிசுச் சீட்டுகள் வாங்கள் கூடாது என்று முடிவு செய்துள்ளோம்.

## கவர்னருக்கு விழுந்தாலும்

முதல் பரிசுட்சீட்டைத் தமிழக கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங்கிற்கு விற்கிறோம். அவர் வாங்குகிற சீட்டிற்கு முதல் பரிசு விழுந்தால், அல்லது வேறு எந்த வகையான பரிசுகள விழுந்தாலும், அதைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு நன்கொடையாகக் கொடுத்துவிட வேண்டும் என நான் சொன்னேன். அதைக் கவர்னர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, பரிசு விழுந்தால் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு நன்கொடை கொடுத்துவிட சம்மதம் தெரிவித்துள்ளார்.

## எதைககாட்டும்.

இந்தப் பரிசுச்சீட்டுத் திட்டத்தால் எத்தனைபேர் புதிதாக லட்சாதிபதிகளானார்கள் என்பதுமட்டுமல்ல, பொது மக்கள் எந்த அளவிற்கு ஆர்வமும், உற்சாகமும் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில்

பரிசுச்சீட்டுகளின் வெற்றி அமையும். பரிசு கிடைக்க வில்லை என்பதால் யாரும் ஏமாற்றம் அடையத் தேவை இல்லை. அரசாங்கப் பணிகளுக்கு நாமும் ஒரு ரூபாய் கொடுத்தோம் என்ற நிம்மதி கொள்ள வேண்டும். பரிசு பெறுபவர்களும் பரிசுகிடைத்தது என்பதால், அதை வீண் விரயங்களில் செலவிட்டு விடாமல், நல்ல காரியங்களில் நாட்டை மேம்படுத்தும் பணிகளில், சிறு தொழில்களில் முதலீடு செய்ய வேண்டும். அரசாங்கத்தின் நோக்கம் சிறிதும் பழுதுபடாத வகையில் பரிசுச்சீட்டுகளை வாங்கும் பொதுமக்களும், பரிசுகளைப் பெறுவோரும் செயல்பட வேண்டும்.

மலேசியா, சிங்கப்பூர்போன்ற பல்வேறு வெளிநாடுகளி லும் பரிசுச் சீட்டுகளை நடத்தும் விதத்தை விரிவான முறையிலும், தெளிவாகவும் ஆராய்ந்தறிந்த பின்னர்தான், குலுக்கும் முறை, போன்ற பரிசுத் திட்ட அம்சங்கள் பல வற்றை நாங்கள் இங்கு புதிதாக அமுல்படுத்தி வருகிறோம். பரிசுச் சீட்டுகளைக் குலுக்கி, பரிசு விழுந்தவர்களைத் தேர்ந் தெடுப்பதில், நீதிபதிகளைக் கொண்ட கமிட்டி யொன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

## அனுதாபம் வேண்டாம்

அண்ணாதுரையின் அரசு செய்கிறது. ஏதோ ஒரு ரூபாய்க்கு டிக்கட் வாங்கி ஆதரிப்போம் என்று அனுதாபத்தில் யாரும் டிக்கட் வாங்க வேண்டாம். அரசாங்கம் என்பது நிரந்தரமானது. அரசாங்கம் தனது அன்றாடப் பணிகள் தவிர, நிரந்தமான கல்வி போன்ற, நல்ல திட்டங்களுக்கும் முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது.

## இரண்டாவது குலுக்கல்

முதல் குலுக்கல் நடந்து முடிந்து, 8 பேருக்கு முதல் பரிசு அளிக்கப்பட்டது. இந்தப் பரிசளிப்பை யொட்டி

தமிழக அரசின் பரிசுச் சீட்டுகளுக்குப் பெரும் வரவேற்பும், பல இடங்களில் உற்சாகமான விற்பனையும் நடந்தது. இரண்டாவதாக 11 வரிசைகள் வெளியிடப்பட்டன. இரண்டாவது வரிசைக் குலுக்கல் நடந்து முடிந்தவுடன் அரசின் லாட்டரித் திட்டத்திற்கு, காங்கிரஸ் தரப்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. ''சூதாட்டம்'' என்றும். ''மக்களை ஓட்டாண்டியாக்குகிற திட்டம்'' என்றும் காங்கிரஸ் தலைவர்கள் கடும் எதிர்ப்பு முழக்கங்களை எழுப்ப ஆரம்பித்தனர். இவர்களது அன்றாடப் பிரச்சாரங்களை—கண்டன முழக்கங்களை—எழுத்துக்களை—மக்கள் பொருட்படுத்துவதாகக் காணோம். சந்தடியின்றி விற்றுக் கொண்டிருந்த லாட்டரிச் சீட்டு விற்பனைக் கடைகளில்-ஆண்களும் -பெண்களும், வரிசை வரிசையாக, அணிவகுத்து நிற்க ஆரம்பித்தனர். இவ்வளவு ஆர்வம் கரைபுரண்டோடுவதைக் கண்ட காங்கிரஸ் பிரமுகர்கள் சிலர் மறியல் செய்வோம் என்றுகூட எச்சரிக்கைவிட ஆரம்பித்தனர். இவ்வளவிற்குப் பின்னரும் மக்களது ஆர்வம் அடங்கிற்றா என்றால்? இல்லை.

அரசாங்கத்திற்கும் சீட்டுகளை வெளியிடுவதில் சிறிது சங்கடம் ஏற்பட்டு, புதிய எந்திரங்கள் மூலமாகத் தருவித்து அரசாங்க அச்சகத்தில அமைக்கும் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறது.

பரிசுச் சீட்டுகள் விற்பனையில், விநியோகத்தில் சில கோளாறுகள் ஏற்படலாம் என்பதை உணர்ந்து அரசாங்கம், லாட்டரிச் சீட்டுகளை எப்படி விற்பனை செய்ய வேண்டும்? என்ற விதிமுறைகளை விரிவாக ஏஜெண்டுகளுக்கு அறிவிப்பு மூலம் விளக்கியது.

ஒரு வரிசையில் ஒரு நபருக்கு, ஒரு டிக்கட் வீதம் தான் ஏஜெண்டுகள் கொடுக்க வேண்டும்—தாங்கள் இருக்கும் இடங்களிலேயே கேட்டு வருகிற மக்களுக்கு,

விநியோகிக்க வேண்டும் என்று ஏஜெண்டுகளுக்குக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

அரசாங்கத்தின் நோக்கத்திற்கு மாறாகச் செயல்படுகிற ஏஜெண்டுகளின் ஏஜென்ஸிகள் ரத்துச்செய்யப்படும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து சில ஏஜெண்டுகள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

## 14 வரிசைகள்

மக்களிடம் ஆர்வப்பெருக்கு அதிகரித்திருக்கிற இந்த நேரத்தில் எத்தனை வரிசைகள் வெளியிட்டாலும் விற்பனையாகும் என்ற நிலை இருந்தும், அரசாங்கம் மூன்றாவது குலுக்கலுக்கு இது வரை 14 வரிசைப், பரிசுச் சீட்டுகளை வெளியிட்டிருக்கிறது.

## முதலமைச்சர் அறைகூவல்

இந்த நிலையில, இரண்டாவது வரிசையில முதல் பரிசு பெற்ற 11 லட்சாதிபதிகளுக்கும் பரிசளிப்பு விழா, சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடந்தது. விழாவில் கலந்து கொண்டு, பரிசு பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கி உரையாற்றிய தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், பரிசுச் சீட்டுகளைப் பற்றிக் கிளப்பப்படுகிற புகார்கள் அனைத்திற்கும் விரிவான விளக்கம் அளித்தார்கள். ஆர்வம் மிக்க மக்கள், தங்கள் ஆர்வம் அளவு கடந்து போகாமல் எப்படிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பது குறித்து அறிவுரை கூறினார்கள்.

ராஜாஜியே லாட்டரியை எதிர்க்கிறார் என்று கூறுபவர்களுக்கு ஆணித்தரமான பதில் அளித்ததுடன், அறைகூவலும் விட்டார்.

பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கண்டிக்கப் பாய்ந்து வருபவர்கள் மதுவிலக்கு பல மாநிலங்களில் காற்றில் பறப்பதைக்

கண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் விநோதப் போக்கைச் சுட்டிக்காட்டினார்.

1968 டிசம்பர் 11-ந் தேதி ராஜாஜி மண்டபத்தில் ஆற்றிய உரை வருமாறு :—

தமிழக அரசு ஆரம்பிக்கும் எந்தத் திட்டமும் ஆரம்பத்தில் சந்தடி இருந்தாலும், போகப் போக அதனால் பல்வேறு வகையான மதிப்பீடுகளுக்கும், விமர்சனங்களுக்கும் இரையாவது இயற்கை.

பரிசுச் சீட்டுத் திட்டத்தை நாங்கள் ஆரம்பித்த நேரத்தில் தயக்கத்துடன்தான் ஆரம்பித்தோம். எந்த அளவிற்கு இந்தத் திட்டம் வெற்றிபெறும் என்பதை எதிர்பார்த்தோமோ அதைவிட, அதிக அளவிற்கு மக்கள் ஆர்வம் காட்ட ஆரம்பித்திருக்கின்றனர். இப்படி அபரிமிதமான ஆதரவு கிடைத்ததைக் கண்டு, நிதி நிலைமையில் நாம் கஷ்டப்பட வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்தவர்கள் கண்டனக் கணைகளைத் தொடுக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

## சூதாட்ட மனப்பான்மையா ?

லாட்டரிச் சீட்டுகளால் சூதாட்ட மனப்பான்மை வளர்ந்துவிட்டது என்ற குரல் கேட்கிறது. ரூ. 50 வைத்திருந்து, அந்த 50-க்கும் லாட்டரிச் சீட்டுகளை வாங்கினால் அது சூதாட்ட மனப்பான்மை. ஒரு மாதத்திற்கு ஒரு பரிசுச் சீட்டு வாங்குவது எப்படி சூதாட்ட மனப்பான்மையாகும் ?

இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் குதிரைப் பந்தயங்கள நடக்கின்றன. குதிரைப் பந்தயங்களில் பணம் கட்டுபவர்களுக்கு ஏற்படாத சூதாட்ட மனப்பான்மை, மாதத்திற்கு ஒரு லாட்டரிச் சீட்டு வாங்குவதன் மூலம் வளர்ந்துவிடுமா ? "போனால் வராது, பொழுது போனால்

கிடைக்காது'' என்று இப்போதே லாட்டரிச் சீட்டுகளை வாங்கிக்கொள்ளுங்கள் என்று யாரும் விற்கவில்லை. மாதத்திற்கொரு லாட்டரி நடத்துகிறோம். இன்று போனால் நாளை வராது என்ற நிலையில் நடத்தப்படவில்லை. எனவே, சூதாட்ட மனப்பான்மை என்பவர்கள் நல்லெண்ணத்தில் விமர்சனம் செய்பவர்களல்லர். ஒரு மாதத்திற்கு ஒரு பரிசுச் சீட்டு வாங்கினால் போதும். ஏராளமான பரிசுச் சீட்டுகளை வாங்கிவிட்டு பரிசு விழவில்லை என்பதால், ஏமாற்றத்துடன் யாரும் தூற்றித் திரியவேண்டாம். ஏக்கத்தின் விளைவாக, அரசாங்கத்திற்கு விரோதமாகப் பேச வேண்டாம். இந்த மாதம் ஒரு ரூபாய்க்கு வாங்கினோம். பரிசு விழாவிட்டாலும் பாதகமில்லை. அடுத்த முறை— அல்லது அதற்கு அடுத்த முறை அதிர்ஷ்டத்தைச் சோதித்துக்கொள்ளலாம் என்று பொதுமக்கள் நிதானம் தவறாமல் நடந்துகொள்ள வேண்டும். யாரும் தங்கள் ஊதியம் முழுவதையும் பரிசுச் சீட்டில் முதலீடு செய்தால் அரசாங்கம் வரவேற்காது. அப்படிப்பட்டவர்களின் நடவடிக்கையை நானே கண்டிப்பேன்.

## அபசுரம்

பரிசுச் சீட்டுத் திட்டத்தால் சிலர் ஓட்டாண்டிகளாகி விட்டதாகப் பிரச்சாரம் செய்பவர்களும் இருக்கிறார்கள். நல்ல சங்கீத வித்துவான் பாடும்போது ஒரு நாலு முறை இருமி, நாலு முறை தும்மி, சங்கீதம் களைகட்டாது அபசுரத்தில் முடியாதா! என்று எதிர்பார்க்கும் சிலரைப் போல், அரசாங்கத்தின் நல்ல நோக்கத்திற்குக் களங்கம் கற்பிக்கிற வகையில் இப்படிப் பேசுகிறார்கள்.

## இவர்கள் யார் ?

''இந்த மாகாணம் கள்ளுக்கடைகளைத் திறந்தது. அந்த மாகாணத்தில் இந்த மாதம் இத்தனை கள்ளுக் கடைகளைத் திறந்தார்கள். மக்கள் கியூ வரிசையில்

தின்று மதுப்புட்டிகளை வாங்கிக் குடித்துவிட்டு மகிழ்ச்சி யோடிருக்கிறார்கள் என்று பிரச்சாரம் செய்பவர்கள்தான், எத்தனை கோடி வருவாய் வருவதாக இருந்தாலும், மது விலக்கைக் கைவிடமாட்டேன் என்று சொல்லுகிற தமிழக அரசிடம் வந்து, லாட்டரிச் சீட்டால் மக்கள் ஓட்டாண்டி களாகிறார்கள் என்று இங்கே வந்து கூறுகிறார்கள். கள்ளுக்கடைகள் திறக்கப்படுவதை எதிர்த்து ஒரு வார்த் தைகூட பேச முடியாதவர்கள் இங்கு வந்து மக்கள் ஓட்டாண்டிகளாகிவிட்டார்கள் என்று காரசாரமாகப் பேசு கிறார்கள். மக்கள் எல்லாம் பங்குகொள்கிற வகையில் நடத்தப்படுகிற இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தால் ஓட்டாண்டிகளாகிற சூழ்நிலையில் அரசாங்கத்தின் பரிசுத் திட்டம் நடத்தப்படவில்லை. பொது நன்மை கருதித்தான் பரிசுச் சீட்டுகள் நடத்தப்படுகின்றன. அதை மனதில் கொண்டுதான் பொதுமக்களும் அரசாங்கத்தின் திட் டத்தை ஆதரித்து வருகிறார்கள்.

## ராஜாஜி அறைகூவல்

ராஜாஜியே எதிர்க்கிறார்! எனவே, பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கைவிடுங்கள் என்று எனக்குப் பலர் சிபாரிசு செய்கிறார்கள். ராஜாஜியிடம் நான் மிகுந்த மதிப்பு வைத் திருக்கிறேன். ராஜாஜியின் கருத்திற்கு உரிய மரியாதை அளிக்கப்பட வேண்டும் என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடுகளுக்கும் இடம் இல்லை. ராஜாஜி சொல்லுகிற நல்லுரைகள் தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியா முழுவதற்கும் சேர்ந்துதான் அவர் ஆன்மீக நெறிகளைப் போதித்துக் கொண்டிருக்கிறார். ராஜாஜியின் புத்திமதி யைக் கேட்டு, மற்ற மாநிலங்களெல்லாம் பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கைவிட முன்வருகிற நேரத்தில் நானும் உட னடியாக பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கைவிடத் தயார். என்னுடைய நண்பர்கள் சிலர் கள்ளுக்கடைகளைத் திறந் தால இத்தனை கோடி வருமானம் வரும் என்று கணக்குக்

காட்டினாலும், நான் மதுவிலக்கில் பிடிவாதமாக இருக்கிறேன். பரிசுத் திட்டத்தை, இந்தியாவில் பல மாநில அரசுகள் நடத்திக் கொண்டிருக்கின்றன. ராஜாஜியின் யோசனைக்குச் செவிசாய்த்து, மாநில அரசுகள் தங்களது பரிசுத் திட்டங்களைக் கைவிட முன்வருமானால், நாங்கள் உடனடியாக பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கைவிடச் சித்தமாக இருக்கிறோம். ராஜாஜியே சொல்லிவிட்டாரே, நீங்கள் ஏன் கேட்கவில்லை? என்று சொல்வதானால்—விவாதத்திற்காக அப்படிப்பட்ட பேச்சைச் சொல்வார்களானால், ராஜாஜியின் உயர்ந்த தத்துவங்களைச் செயல்படுத்துகின்ற அளவிற்கு நாம் இன்னமும் பக்குவப்படவில்லை என்பதைத் தான் விவாதத்திற்குப் பதிலாகச் சொல்ல முடியும்.

## சினிமா பாதிக்கப்பட்டதா

தமிழக அரசு பரிசுச் சீட்டுகளை நடத்துவதன் மூலம், சினிமாத் தொழில் பாதிக்கப்பட்டிருப்பதாக சினிமாத் தொழில் சம்மந்தப்பட்ட என்னுடைய நண்பர்கள் சிலபேர் சொல்கிறார்கள். நானும், வாரத்திற்கு வாரம், மாதத்திற்கு மாதம் சினிமாக் கொட்டகைகளில் எவ்வளவு வசூலாகிறது என்ற கணக்கைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். சினிமாவிற்கு வசூல் குறைந்து விட்டது என்று சொல்கிற அதே நேரத்தில், இந்தப் படம் 10-வது வாரம் 11-வது வாரம் என்று படம் ஓடும் கணக்கையும் விளம்பரமாக வெளியிட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள். பரிசுசீட்டால் சினிமா வசூல் குறைந்தால், அதனால் அரசாங்கத்திற்கும் தான் நஷ்டம் ஏற்படும். தமாஷா வரி, அரசிற்குக் கிடைக்கும் முக்கிய வரி இனங்களில் ஒன்று. எனவே, உண்மையிலேயே சினிமாத் தொழில் பாதிக்கப்படுகிற நிலை வந்தால் சினிமாத் தொழிலுக்குத் தக்க ஆறுதல் அளிக்க நான் யோசிப்பேன்.

## ஒன்றால் ஒன்று கெடுமா?

முதல் இரண்டு வரிசைப் பரிசுச்சீட்டுகள் குலுக்களின் மூலம் செலவு போக ரூ. 1—25 கோடி நிகர வருவாய் கிடைத்ததைப் பார்த்தவுடன், ''இந்தப் பரிசுச்சீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படாமல் இருந்திருந்தால், இந்த 1-25 கோடி ரூபாயும் நமக்குத்தானே வருமானமாக வந்திருக்கும்'' என்று எண்ணி சினிமாத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள், பரிசுச் சீட்டால் தங்களுக்குப் பாதகம் வருவதாகக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

அறுவடைக் காலத்தில் வசூல் சற்று குறைவாக இருக்கும், அதற்கப்புறம் வசூல் பழையநிலைக்கே வந்துவிடும். சினிமாவுக்குப் போகும் பணத்தில் பரிசுச்சீட்டு வாங்கினால் என்ன? என்று ஆரம்பத்தில் கருதுபவர்கள்கூட, ஒருமாதம் இரண்டுமாதம் சென்றதும், லாட்டரிக்கு ஒரு ரூபாய் என்று தனியாகத் தங்கள் குடும்ப வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்க ஆரம்பித்து விடுவார்கள்.

லாட்டரிச் சீட்டுகள் நடத்தப்படுவதால் உலகில் வேறு எந்த நாட்டிலாவது, சினிமாவோ, நாடகமோ பாதிக்கப்பட்டதா? என்றால் இல்லை.

மலேசியாவிலும், சிங்கப்பூரிலும்—சினிமாக் கொட்டகைகளுக்கு வெளியில் சினிமாக்களுக்கு முன்னிலையில் லாட்டரிச்சீட்டுக் கடைகள் உள்ளன. சினிமாக் கொட்டகைகளுக்கு அருகாமையில் லாட்டரி விற்பனை நடத்தப்படுவதால் சினிமாக் கொட்டகைகளின் வசூல் பாதிக்கப்படவில்லை.

நியூயார்க் நகரில் வாரத்திற்கொரு லாட்டரி நடத்துகிறார்கள்.

அப்படி இருந்தும், 6 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடக்கிற நாடகத்தைக்கூட மக்கள் ஆர்வத்துடன் கண்டு களித்துக் கொண்டிருக்கின்றனர். அங்கும் மக்களை, சினிமாவையோ, நாடகத்தையோ விட்டு விட்டு, லாட்டரிச் சீட்டுகளை வாங்கவில்லை.'

ஆரம்பத்தில் சினிமாக் கொட்டகைகள் ஆரம்பிக்கப் பட்டபோது, ஹோட்டல்கள் எல்லாம் படுத்துவிடும். சினிமா வந்துவிட்டதால் ஹோட்டல்களை யெல்லாம் மூடி விட வேண்டியிருக்கும் எனக் கூடச் சொன்னார்கள். இன்றைய நிலைமை என்ன? சினிமாக் கொட்டகைகளுக்குள்ளேயே ஹோட்டல்களை ஆரம்பித்து, சினிமாவிற்கு எவ்வளவு வசூலாகிறதோ அந்த அளவிற்கு ஹோட்டல்களிலும் வசூலாகிறது.

பஸ்கள் வந்துவிட்டால குதிரை வண்டிகள், மாட்டு வண்டிகளுக்கு வேலையே இருக்காது என்று கூடச் சொன்னார்கள். பஸ் போக்குவரத்து அதிகரித்துள்ள இந்தக் காலத்தில் குதிரை, மாட்டுவண்டிகளும் மக்களுக்கு அவசியம் தேவைப்படுகிறது. பஸ்ஸிலிருந்து இறங்கியதும் சந்து, பொந்துகளுக்குச் செல்ல; பஸ்கள் செல்ல முடியாத தெருக்களில் செல்ல மாட்டு வண்டிகள் குதிரை வண்டிகளைத்தான் பொதுமக்கள் அமர்த்திக் கொள்கிறார்கள். ஆக ஒன்றை யொன்று விரட்டி விடும் என்ற பேச்சிற்கே இடம் இல்லை. உண்மையிலேயே சினிமாத் தொழில் பாதிக்கப்படுகிற சூழ்நிலை உருவானால், அதற்கு நிவாரணம் அளிப்பது குறித்து நான் யோசிப்பேன்.

பரிசு பெற்றவர்கள் தங்கள் பணத்தை, அதிர்ஷ்டத்தை, அதிர்ஷ்டத்தால்கிடைத்தது என்று தாறுமாறாகச் செலவிட்டு விடாமல், வீண் ஆடம்பரங்கள் கல்யாண டாம்பீகங்கள், தேர்த்திருவிழாக்கள என்று பணத்தை விரயமாக்காமல், சிக்கனமாகச் செலவிட்டு, சிறு தொழில்

களை ஆரம்பித்து, தனக்கு மட்டுமின்றி, நாட்டிற்கும் இந்தப் பணம் பயனளிக்கும் வகையில் செயல்பட வேண்டும்.

பரிசுச் சீட்டுத் திட்டத்தால் பெற்ற பரிசு, நல்ல முறையில் பயன்டுத்தப்படுகிறது என்ற கீர்த்தியை உண்டாக்க வேண்டும்.''

பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிகர வருவாயில் கல்விக்கு, விவசாயத்திற்கு, மருத்துவத்திற்கு, இன்னோரன்ன பிற துறைகளுக்கு, எவ்வளவு தொகைகளை ஒதுக்கலாம் என்பது சம்பந்தமாக அரசாங்கம் விரிவான திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகிறது.

## வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

எல்லோரும் ஆங்கிலம் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். பலருடைய பாராட்டைப் பெற்ற ''வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி'' கொண்டு பிறருடைய உதவி இல்லாமலே சில நாட்களில் சுலபமாக தமிழ்மூலம் இங்கிலீஷ் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம்.

விலை ரூ. 5-00. தபால் செலவு ரூ. 1–50.

## மெஸ்மெரிச மர்மம்

இந் நூலில் மனோவசியத்தைப் பற்றியும், அதனை அப்பியாசிக்க வேண்டிய முறைகளைப் பற்றியும் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. அஞ்ஞனம் செய்யும் நூதன வழிகளும் கவர்ச்சிகரமான படங்களையும் கொண்டது இந்தப் புத்தகம்.

விலை ரூ. 3-00. தபால் செலவு ரூ. 1–00.

## வாணி குடும்ப இலகு வைத்தியம்

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' எவ்வளவுதான் செல்வம் படைத்திருந்தாலும் நோய் நொடி இல்லாமல் இருந்தால் அந்த வாழ்வு நல்ல இன்ப வாழ்வாக இருக்கும். இதில், ஆரோக்கியம், பலம், இழந்துபோன ஆண்மை எப்படி பெறுவது போன்ற அனேக வைத்திய இரகசியங்கள் அடங்கியிருக்கின்றன. விலை ரூ. 3–00 தபால் செலவு ரூ. 1–00

## ஐசுவரியம் (கைத்தொழில் முறைகள்)

ரூ. 10–00 முதல் வைத்து மாதம் ரூ. 1000–00 வரை சம்பாதிக்கக்கூடிய 206 கைத்தொழில்களைச் சுலபமாகக் கற்றுக்கொண்டு முன்னுக்கு வரலாம். இதில் சோப்பு, இங்கி, ஊதுபத்தி, வாசனைத் தைலம், ஸ்நோ, பேஸ் பவுடர், சாம்பிராணி, பிஞயில் ஆகிய தொழில்களைக் கற்றுப் பயனடையலாம்.

விலை ரூ. 4-00. தபால் செலவு ரூ. 1–00.

கிடைக்குமிடம் :

## B. மோஹன் ராவ்,

3, மலையபெருமாள் தெரு, சென்னை-1.